கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். திருமங்கலம்

16.03.2023

**அசல் வழக்கு எண். 100/2018**

**பி.வா.சா. 1 – இராமச்சந்திரன்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

**ஆரம்பித்த நேரம் : 12.35 PM**

தாவா வழக்கு மதுரை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வாதி சங்கம் என்பது ஒரு பதிவு செய்யப்பட்ட சங்கம் என்று சொன்னால் சரிதான். அதன் பதிவு எண். 2497 என்று சொன்னால் சரிதான். வாதி சங்கம் என்பது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமாரி, திருச்சி மாவட்டங்களில் உள்ள பஞ்சாலைகளில் வேலை பார்க்கும் தொழிலாளர் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம் என்று சொன்னால் சரிதான். வாதி சங்கமானது இந்து மஸ்தூர் சங்கத்தின் அங்கீகாரம் பெறப்பட்டது என்று சொன்னால் சரியல்ல, வாதி சங்கமானது இந்து மஸ்தூர் சங்கத்துடன் இணைக்கப்பட்ட சங்கமாகும். மேற்படி சங்கத்திற்கு என துணைவிதிகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த துணைவிதிகளும் முறையாக பதிவு செய்யப்பட்டவை என்று சொன்னால் சரிதான். விதி எண். 32 ன் படி மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமாரி, திருச்சி மாவட்டங்களில் உள்ள பஞ்சாலைகளில் வாதி சங்கத்திற்காக கிளைகள் அமைக்கும் உரிமை வாதி சங்கத்திற்கு உண்டு என்று சொன்னால் சரிதான். வாதி சங்கத்தின் கீழ் தனக்கன்குளம் சீதாலெட்சுமி மில்லில் ஒரு கிளை ஆரம்பிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 1969 ல் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி கிளைச்சங்கம் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது என்று சொன்னால் 1984 ம் ஆண்டு வரை இருந்தது அதற்கு பின்பு நடைமுறையில் இல்லை. சங்கங்களின் மாவட்ட பதிவாளர் அவர்களால் வாதி சங்கம் இயங்காமல் உள்ளது என அறிவிக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பதிவாளர் அறிவிப்பு அதற்கு அவசியம் இல்லை. நான் சங்கம் இயங்கவில்லை என்பதற்கு மாவட்ட

பதிவாளர் அறிவிப்பு அவசியம் இல்லை என தற்போது வழக்கிற்காக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.1 பாதர்வெள்ளை இந்த வழக்கை வாதி சங்கத்திற்காக பொது காரியதரிசி என்ற அடிப்படைடயில் வழ்க்கை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து தனக்கன்குளம் கிராமத்தில் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதன் சர்வே எண். 221/2 என்று சொன்னால் சரிதான். சர்வே எண். 221/2ல் மொத்தம் 5 ஏக்கர் 66 சென்ட் உள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த 5 ஏக்கர் 66 சென்டும் பல வீட்டடி மனைகளாக ஆதியில் பிரிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். பிளாட் எண். 65ல் மேல்புறம் உள்ள 2–1/4 சென்டும் 31 சதுரடியும் தான் தாவா சொத்து என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து வாதி சங்கத்திற்கு தனித்து சர்வசுதந்திர பாததியப்பட்டது என்று பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. தவறு. தாவா சொத்தை வாதி சங்கம் அனுபவித்து வருவதை நாங்கள் இடைஞ்சல் செய்யக்கூடாது என வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்று சொன்னால் தாக்கல் செய்துள்ளனர் ஆனால் அனுபவம் வாதிவசம் இல்லை.

மறுவிசாரணை இல்லை.

**முடிவடைந்த நேரம் : 12.45 PM**